# அருப்புக்கோட்டை நகராட்சி

## நகர்மன்ற சாதாரணக்கூட்டப்பொருள்

நிகழும் திருவள்ளுவராண்டு 2054 சோபகிருது வருடம் ஆடி மாதம் 15ம் நாள் 2023ம் ஆண்டு 31.07.2023ம் நாள் திங்கள் கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அருப்புக்கோட்டை நகர்மன்ற கூட்ட மண்டபத்தில் சாதாரணக்கூட்டம் நடைபெறும். அதுசமயம் கீழ்க்கண்ட பொருட்கள் மன்ற பரிசீலனைக்கு எடுத்துக்கெள்ளப்படும்

(ஒம்)திரு.சி.சுந்தரலட்சுமி

இடம்: அருப்புக்கோட்டை — நகர்மன்றத்தலைவர்

நாள்: 27.07.2023 — அருப்புக்கோட்டை நகராட்சி

பொருள்1: ஆணையாளர் அவர்களது ஜீலை 2023 மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு:-

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

தீர்மான எண்: 668

பதிவு செய்யப்பட்டது

பொருள்2: நகராட்சி பொறியாளர் ஜீலை 2023 மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு:-

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

தீர்மான எண்: 669

பதிவு செய்யப்பட்டது

பொருள்3: பிறப்பு இறப்பு விவரம் கீழ்க்கண்ட விபரப்படி மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

பதிவு செய்யப்பட்டவை

| | ஜீலை 2023 |
|---|---|
| பிறப்பு | 51 |
| இறப்பு | 46 |
| இறந்து பிறந்தவை | 0 |

அலுவலகக்குறிப்பு:-

பதிவு செய்யலாம்

தீர்மான எண்: 670

பதிவு செய்யப்பட்டது

பொருள்4: நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை அரசாணை (நிலை) எண் 98 நாள் 13.07.2023ன்படி நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட நகர்மன்ற தலைவர், நகர்மன்ற துணைத்தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்களுக்கு

மாதந்தோறும் மதிப்பூதியம் கீழ்கண்டவாறு வழங்குவதற்கு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | விபரம் | மாதம் ஒன்றிற்கு மதிப்பூதியம் (ரூபாயில்) |
|---|---|---|
| 1 | நகர்மன்றத்தலைவர் | 15,000/- |
| 2 | நகர்மன்ற துணைத்தலைவர் | 10,000/- |
| 3 | நகர்மன்ற உறுப்பினர் | 5,000/- |

<u>அலுவலககுறிப்பு:-</u>

பார்வையிட்டு பதிவு செய்யலாம் ந.க.எண்.1602/2022/இ1

தீர்மான எண்: 671

பதிவு செய்யப்பட்டது

பொருள்5: அருப்புக்கோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட M.D.R. நகர் 6வது தெருவில் சர்வே எண் 62/41 கொண்ட இடத்தை தவறுதலாக வீதியாக சர்வே ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளதை ரத்து செய்யவும் மற்றும் மேற்படி இடத்தை தங்களுக்கு பாத்தியம் என்று விளம்புகை பெறவும் தங்களின் அனுபவத்தை இடைஞ்சல் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை கோரியும் 1. பரமேஸ்வரி மற்றும் 2. ராஜேஸ்வரி என்பவர்களால் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்ற வழக்கு எண் O.S.No.143/2023ல் இந்நகராட்சி ஆணையாளரை 2ம் பிரதிவாதியாக சேர்த்து வழக்கு தொடரப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் இந்நகராட்சி சார்பாக A.பாஸ்கரன் BSC., BL வழக்கறிஞர் ஆஜராவதற்கும் அதற்கான செலவினத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.3111/2023/எப்1

தீர்மான எண்: 672

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்6: இயக்குநர், தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், கோயம்புத்தூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.399/2023/அ2 நாள் 06.07.2023ன்படி 2023-2024ஆம் ஆண்டிற்கு அருப்புக்கோட்டை நகராட்சியால் செலுத்தப்பட வேண்டிய பங்களிப்பு தொகை ரூ.75,000/- ஐ செலுத்த கோரப்பட்டுள்ளது. மேற்படி பங்களிப்பு தொகையானது தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனத்தின் கட்டிட மேம்பாட்டிற்காகவும் மற்றும் பராமரிப்பிற்காகவும் ஆண்டுதோறும் நகராட்சிகளால் பங்களிப்பு தொகை செலுத்தப்பட்டுவருகிறது. எனவே, மேற்படி காரணங்களுக்காக அருப்புக்கோட்டை நகராட்சியில் 2023-2024ம் ஆண்டிற்கு

செலுத்தப்பட வேண்டிய பங்களிப்புத்தொகை ரூ.75,000/-ஐ செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.5350/2018/சி1

தீர்மான எண்: 673

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்7: நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களை எதிர்த்து திருமதி.வி.வரலட்சுமி, சமுதாய அமைப்பாளர் (ஓய்வு) அவர்கள் சென்னை உயர்நீதிமன்றம், மதுரை பலகையில், தான் 2016ம் ஆண்டில் தான் பார்க்கும் பணியோடு வறுமை ஒழிப்புத் திட்டப் பணிகள் பார்த்ததற்கு சம்பளத்தோடு கூடுதலாக மாதம் தோறும் ரூ.9000/-னை வழங்கக்கோரி வழக்கு எண்.டபிள்யூ.பி.(எம்டி) நம்பர் 14483/2023 நாள்.23.06.2023ல் வழக்கு தொடர்ந்த வகையில் அதனை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சார்பில் வழக்காடுவதற்கு திரு.பி.திலக்குமார், எம்.காம்.பி.எல்., அரசு வாதி அவர்களுக்கு வழக்குக் கட்டணமாக ரூ.9500/-னை வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

மன்றம் அனுமதிக்கலாம். அவசர அவசியம் கருதி நகர் மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று தொகை வழங்குவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.4055-1/2023/சி1

தீர்மான எண்: 674

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்8: அருப்புக்கோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 3ல் மதுரை ரோட்டில் இருந்து அன்பு நகர் 1வது தெருவிற்கு செல்லும் பாதையில் பொது மக்களின் போக்குவரத்திற்கு இடையூறாக உள்ள 3 (எண்ணம்) உயர் அழுத்த மின்கம்பங்களை இடமாற்றம் செய்யக்கோரி உதவிபொறியாளர் (நகர் வடக்கு) அவர்களுக்கு 10.04.2023ல் கடிதம் அனுப்பப்பட்டது. மேற்படி கடிதத்தில் கேட்டுக் கொண்டதற்கிணங்க 3 (எண்ணம்) உயர் அழுத்த மின் கம்பங்களை இடமாற்றம் செய்வதற்கு ரூ2,29,420/- செலுத்தக்கோரி கேட்பு பட்டியல் வரப்பெற்றுள்ளது. எனவே மேற்படி தொகையை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பொதுமக்களின் போக்குவரத்தினை கருத்தில் கொண்டு அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று ரூ.2,29,420/-யை தமிழ்நாடு

மின்சார வாரியத்திற்கு செலுத்தியதையும் மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.1775/2012/இ2

தீர்மான எண்: 675

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்9: அருப்புக்கோட்டை நகராட்சியில் பொறியியல் பிரிவு பராமரிப்பில் உள்ள ஸ்கார்பியோ வாகன எண் TN67 CZ2538க்கு 3வது சர்வீஸ் பணிகளை மகேந்திரா & மகேந்திரா நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற நிறுவனமான M/s.Automative Manufactures PVT., LTD., கப்பலூர், மதுரை மூலம் மேற்கொள்வதற்கு, அதற்காகும் உத்தேச செலவின தொகையை வருவாய் நிதியின் கீழ் செலவு செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.3824/2023/இ2

தீர்மான எண்: 676

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்10: அருப்புக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 25 தேவாடெக்ஸ் கணேஷ் நகர் சாலையில் அமைந்துள்ள ஓடையின் மேல் பாலம் அமைத்து தரும்படி அப்பகுதி பொதுமக்கள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர் கேட்டுக்கொண்டனர். இப்பாலமானது தேவாடெக்ஸ் குறுக்குத்தெருக்கள் கணேஷ் நகருடன் இணைப்பதால் நகராட்சி மூலம் பொதுமக்களுக்கு வழங்கப்படும் குடிநீர் வாகனம் சென்று வர வசதியாக இருக்கும் எனவும் உடன் இப்பணியினை மேற்கொள்ளும் படி கேட்டுக்கொண்டதால் ஆணையாளர் மற்றும் நகர்மன்றத்தலைவர் அவர்களின் அறிவுறையின்படி இடம் பார்வையிடப்பட்டது. இப்பாலம் அமைப்பதால் தேவாடெக்ஸ் மற்றும் கணேஷ் நகரினை இணைக்கும் பாலமாக இருக்கும் மேலும் பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் வசதியாக இருக்கும் என்பதால் வார்டு எண் 25 தேவாடெக்ஸ் கணேஷ் நகர் சாலையில் அமைந்துள்ள ஓடையின் மேல் பாலம் அமைக்கும் பணிக்கு உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.12.00 இலட்சத்தினை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு:-</u>

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.4204/2023/இ1

தீர்மான எண்: 677

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்11: அருப்புக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 14 கு.பா.தெருவில் அமைந்துள்ள சிமெண்ட் சாலைகள் சேதமடைந்துள்ளதால் பொதுமக்கள் போக்குவரத்திற்கு மிகவும் சிரமமாக உள்ளதாக பொதுமக்கள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர் கேட்டுக்கொண்டதன் அடிப்படையிலும் ஆணையாளர் மற்றும் நகர்மன்ற தலைவர் அறிவுறுத்தலின் படியும்

இடம் பார்வையிடப்பட்டது. மேற்படி சாலையானது மிகவும் சேதமடைந்துள்ளதால் பணியின் அவசர அவசியம் கருதி மேற்படி பணி மேற்கொள்வது அவசியமாகும். எனவே வார்டு எண் 14 கு.பா.தெருவில் பேவர்பிளாக் தளம் அமைக்கும் பணிக்கு உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.3.30 இலட்சத்தினை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு:-

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.4205/2023/இ1

தீர்மான எண்: 678

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்12: அருப்புக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 17 நாகலிங்கா நகர் பகுதியில் மழைநீர் வடிகால் இல்லாத பகுதிகளில் மழைநீர் வடிகால் அமைத்து தரும்படி பொதுமக்கள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர் கேட்டுக்கொண்டதன் அடிப்படையிலும் ஆணையாளர் மற்றும் நகர்மன்றத்தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படியும் இடம் பார்வையிடப்பட்டது. இப்பகுதியில் மழைக்காலங்களில் மழைநீர் தேங்கி சுகாதாரக்கேடு ஏற்படுவதால் உடன் இப்பணி மேற்கொள்வது அவசியமாகும் எனவே வார்டு எண் 17 நாகலிங்கா நகர் பகுதியில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.9.90 லட்சத்தினை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு:-

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.4206/2023/இ1

தீர்மான எண்: 679

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்13: அருப்புக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 8 ஜவஹர் சங்கம் தெருவில் அமைந்துள்ள நகராட்சிக்கு சொந்தமான சமுதாயக்கூடத்தில் உணவு உண்ணும் அறை (Dining Hall)அமைக்கும் படி ஆணையாளர் மற்றும் நகர்மன்றத்தலைவர் அறிவுறுத்தியதின்படி இடம் பார்வையிடப்பட்டது. சமுதாயக்கூடத்தில் உணவு உண்ணும் அறை அமைப்பதால் நகராட்சிக்கு தற்போது கிடைக்கும் வருவாயினை விட கூடுதலாக வருவாய் கிடைக்கும் என்பதால் வார்டு எண் 8 ஜவஹர் சங்கம் தெருவில் அமைந்துள்ள சமுதாயக்கூடத்திதல் உணவு உண்ணும் அறை அமைக்கும் பணிக்கு உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.20.00 இலட்சத்தினை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு:-

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.4207/2023/இ1

தீர்மான எண்: 680

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்14: அருப்புக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 6 சௌந்திரபாண்டியன் காம்பவுண்ட் மெயின் தெருவில் அமைந்துள்ள பூங்கா பயன்பாடில்லாமல் உள்ளதால் பொதுமக்கள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் பூங்காவினை பயன்பாட்டிற்கு கொண்டுவரும்படி கேட்டுக்கொண்டனர். ஆணையாளர் மற்றும் நகர்மன்றத்தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி இடம் பார்வையிடப்பட்டது. அதில் முன்புறம் சுற்றுச்சுவர் மற்றும் பாதுகாப்பு கதவு (Entrance Gate) இல்லாமலும் குழந்தைகள் விளையாடுவதற்க்கு Play Equipments இல்லாமல் உள்ளது. எனவே வார்டு எண் 6 சௌந்திரபாண்டியன் காம்பவுண்ட் மெயின் தெருவில் அமைந்துள்ள பூங்காவில் புணரமைப்பு பணிக்கு உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.2.50 இலட்சத்தினை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு:-</u>

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.4210/2023/இ1

தீர்மான எண்: 681

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்15: அருப்புக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 27 அரசமரத்து தெருவில் மழைநீர் வடிகால் சேதமடைந்து உள்ளதால் மழைக்காலங்களில் மழைநீர் தேங்கி சுகாதாரகேடு ஏற்படுவதாக பொதுமக்கள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர் கோரிக்கை விடுத்துள்ளனர். எனவே ஆணையாளர் மற்றும் நகர்மன்றத்தலைவர் அறிவுறுத்தலின்படி இடம் பார்வையிடப்பட்டது. மேற்கண்ட சாலையில் அமைந்துள்ள மழைநீர் வடிகால் பழுதடைந்துள்ளதால் உடன்சரிசெய்வது அவசியமாகும். எனவே வார்டு எண் 27 அரசமரத்து தெருவில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.3.00 இலட்சத்தினை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு:-</u>

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.4211/2023/இ1

தீர்மான எண்: 682

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்16: அருப்புக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 23 உஜ்ஜி சாமி கோவில் தெருவில் அமைந்துள்ள பாலம் சேதமடைந்துள்ளதாகவும் மேலும் பாலம் அமைந்துள்ள பிறமடை ஓடையின் கைபிடி சுவர் (Parapetwall) இல்லாததால் பாதுகாப்பு இல்லாமல் உள்ளதால். சிறுவர்கள் மற்றும் வாகனங்கள் தடுமாறி கீழே விழும் நிலை உள்ளதாக பொதுமக்கள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர் தெரிவித்தனர். எனவே ஆணையாளர் மற்றும் நகர்மன்றத்தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின் படி மேற்கண்ட பணிக்கான இடம் பார்வையிடப்பட்டது. இப்பகுதியில் உள்ள பாலம் மிகவும் சேதமடைந்து போக்குவரத்திற்கு மிகவும் சிரமமான நிலை உள்ளது. ஓடையில் கைப்பிடி சுவர் (Parapet Wall) இல்லாததால் சிறுவர்கள் மற்றும் வாகத்தில் செல்பவர்களுக்கு பாதுகாப்பு இல்லாமல் உள்ளதால் பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு உடன் இப்பணி மேற்கொள்வது

அவசியமாகும். எனவே வார்டு எண் 23 உஜ்ஜிசாமி கோவில் தெருவில் பாலம் மற்றும் கைபிடி சுவர் (Parapetwall) அமைக்கும் பணிக்கு உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.16.00 இலட்சத்தினை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு:-</u>

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.4213/2023/இ1

தீர்மான எண்: 683

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்17: அருப்புக்கோட்டை நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் 10 அஜீஸ் நகர் 6வது மெயின் சாலை 1வது குறுக்கு தெருவில் சாலை மற்றும் மழைநீர் வடிகால் வசதி செய்து தரும்படி பொதுமக்கள் மனு அளித்துள்ளனர் ஆணையாளர் மற்றும் நகர்மன்றத்தலைவர் அவர்களின் அறிவுரையின்படி மேற்படி இடம் பார்வையிடப்பட்டது. இப்பகுதியில் சாலை மற்றும் மழைநீர் வடிகால் இல்லாததால் போக்குவரத்திற்கு மிகவும் சிரமமாக உள்ளது என பொதுமக்களும் தெரிவித்தனர். எனவே வார்டு எண் 10 அஜீஸ் நகர் 6வது மெயின் சாலை 1வது குறுக்கு தெருவில் பேவர்பிளாக் தளம் அமைக்கும் பணிக்கு உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.3.50 இலட்சத்தினை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு:-</u>

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.4215/2023/இ1

தீர்மான எண்: 684

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்18: அருப்புக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 1 முதல் 36 வரை உள்ள பகுதிகளில் ஏற்படும் பழுதுகளை சரிசெய்ய தேவைப்படும் அடிகுழாய் உதிரிபாகங்கள் வாங்கும் பணிக்கு உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.9.00 இலட்சத்தினை நகராட்சி குடிநீர் வடிகால் மூலதன நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு:-</u>

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.4227/2023/இ1

தீர்மான எண்: 685

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்19: இந்நகராட்சிக்குட்பட்ட விரிவாக்கப் பகுதிகளான வார்டு எண் 25, 24, 23 பகுதிகளில் புதிய LEDவிளக்குகள் வாங்கி பொருத்தும் பணிக்கு ஆகும் உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.9.90 இலட்சத்தினை நகராட்சி வருவாய் நிதயின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு:-</u>

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.4230/2023/இ2

தீர்மான எண்: 686

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்20: அருப்புக்கோட்டை நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் 31 சுப்ரமணியபுரம் 4வது குறுக்குத்தெருவில் மழைநீர் வடிகாலுடன் கூடிய சாலை வசதி அமைத்து தரும்படி பொதுமக்கள் மற்றும் நகர்மன்ற உறுப்பனர் கேட்டுக்கொண்டதற்கிணங்க ஆணையாளர் மற்றும் நகர்மன்ற தலைவர் அவர்கள் அறிவுறுத்தலின்படி இடம் பார்வையிடப்பட்டது. இப்பகுதியானது மண்சாலையாக உள்ளதால் போக்குவரத்திற்கு மிகவும் சிரமமாக உள்ளதாலும் இச்சாலை பணி மேற்கொள்வது அவசியமாகும். எனவே வார்டு எண் 31 சுப்ரமணியபுரம் 4வது குறுக்குத்தெருவில் மழைநீர்வடிகாலுடன் கூடிய பேவர்பிளாக் சாலை அமைக்கும் பணிக்கான உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.3.50 லட்சத்தினை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு:-

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.4216/2023/இ1

**தீர்மான எண்: 687**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்21: அருப்புக்கோட்டை நகராட்சி வார்டு எண் 3 அன்புநகர் 3வது தெரு வார்டு எண் 5 பெரியார் நகர் 2வது தெரு மற்றும் வார்டு எண் 28 வர்த்தக சங்கம் தெரு உள்ள மினிபவர் பம்புகளில் நீர்வரத்து இல்லாத காரணத்தினால் அதற்கு பதிலாக புதியதாக ஆழ்துளை கிணறுகள் அமைத்து குடிநீர் அல்லாத விநியோகப்பணிகள் செய்து தருமாறு வார்டு 3, 5 மற்றும் வார்டு 28 நகர்மன்ற உறுப்பினர்கள் கோரிக்கை வைத்தனை தொடர்ந்து மேற்படி இடங்களில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைக்கும் பணிக்கு உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.3.00 இலட்சத்தினை நகராட்சி வருவாய் நிதயின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு:-

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.4217/2023/இ1

**தீர்மான எண்: 688**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்22: அருப்புக்கோட்டை நகராட்சி வார்டு எண் 13 பாம்பலம்மன் கோவில் தெரு மற்றும் வடக்கு துரைராஜபுரம் ஆகிய தெருக்களில் சிறுமின்விசை பம்பு கட்டிடங்கள் சிதலமடைந்து உள்ளதால் இதனை சரிசெய்து தருமாறு நகர்மன்ற உறுப்பினர் கோரிக்கை வைத்துள்ளளார். அதன்படி மேற்படி இடம் தளஆய்வு செய்யப்பட்டது. நகராட்சி ஆணையாளர், பொறியாளர் அவர்களது நேரடி அறிவுரையின்படி மினிபவர்பம்ப் கட்டிடங்களை புதுப்பிப்பதற்கு ஆகும் உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.2.50 இலட்சத்தினை நகராட்சி குடிநீர் வடிகால் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு:-

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.4218/2023/இ1

தீர்மான எண்: 689

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்23: அருப்புக்கோட்டை நகராட்சி வார்டு எண் 17 நாகலிங்க நகர் வார்டு எண் 10 காட்டுபாவா தெரு கிழக்கு மற்றும் வார்டு எண் 35 துப்புரவு தொழிலாளர் குடியிருப்பு ஆகிய பகுதிகளில் உள்ள உபயோகமற்ற சிறுவிசை மினிபவர்பம்பு கட்டிடங்களை இடித்து அப்புறப்படுத்துமாறு நகர்மன்ற உறுப்பினர்கள் கோரிக்கை வைத்துள்ளனர். அதனை தொடர்ந்து மேற்படி இடம் தல ஆய்வு செய்யப்பட்டது அதன்படி மேற்படி இடங்களில் உள்ள உபயோகமற்ற சிறுவிசை மினிபவர்பம்பு கட்டிடங்களை இடித்து அப்புறப்படுத்தும் பணிக்கு ஆகும் உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.50000/-ஐ நகராட்சி குடிநீர் வடிகால் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு:-

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.4219/2023/இ1

தீர்மான எண்: 690

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்24: அருப்புக்கோட்டை நகராட்சி வார்டு எண் 35 ராமசாமிபுரம் கிழக்கு கண்மாய்கரையில் உள்ள சிறுவிசை மினிபவர் பம்பிலிருந்து ராமசாமிபுரம் தெருவிற்கு செல்லும் பகிர்மான குழாய் மிகவும் சிதலம் அடைந்துள்ளது. இதனை சரிசெய்து தருமாறு நகர்மன்ற உறுப்பினர் கோரிக்கையின் அடிப்படையில் மேற்படி இடம் தள ஆய்வு செய்யப்பட்டதனை தொடர்ந்து வார்டு எண் 35 ராமசாமிபுரம் கிழக்கு கண்மாய்கரையில் உள்ள சிறுவிசை மினிபவர் பம்பிலிருந்த ராமசாமிபுரம் தெருவிற்கு செல்லும் பகிர்மான குழாயினை சரிசெய்யும் பணிக்கு ஆகும் உத்தேச மதிப்பீட்த்தொகை ரூ.4.50 இலட்சத்தினை நகராட்சி குடிநீர் வடிகால் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு:-

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.4220/2023/இ1

தீர்மான எண்: 691

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்25: இந்நகராட்சி வார்டு எண் 4ல் உள்ள நகராட்சி துவக்கப்பள்ளியில் உள்ள சத்துணவு சமையற்கூடம் மற்றும் சமையல் பொருட்களுக்கு பாதுகாப்பு வசதிகள் இல்லை. இந்த பள்ளி கூடத்தில் சமையலறை மற்றும் சமையல் பொருட்களுக்கான பாதுகாப்பு அறை கட்டித்தருமாறு வார்டு நகர்மன்ற உறுப்பினர் வேண்டுகோள் விடுத்துள்ளார். அதன்படி மேற்படி நகராட்சி துவக்கப்பள்ளியில் சத்துணவு கூடம் மற்றும் சமையல் பொருட்கள் பாதுகாப்பு அறை கட்டித்தரும் பணிக்கு உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.8.25 இலட்சத்தினை நகராட்சி கல்வி நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு:-

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.4223/2023/இ1

**தீர்மான எண்: 692**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**பொருள்26:** அருப்புக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 13 காந்தி மைதானம் சித்தவைத்திய சாலையிலிருந்து காந்திமைதானம் பொட்டல் வரை மழைநீர் வடிகால் இல்லாததால் மழைக்காலங்களில் மழைநீர் தேங்கி சுகாதார கேடு ஏற்படுகிறது என பொதுமக்கள் மற்றும நகர்மன்ற உறுப்பினர் கேட்டுக்கொண்டதற்கிணங்கவும் மற்றும் ஆணையாளர் நகர்மன்றத்தலைவர் அறிவுறுத்தலின்படியும் இடம் பார்வையிடப்பட்டது. மழைநீர்வடிகால் இல்லாததால் மழைநீர் தேங்கி பொதுமக்கள் போக்குவரத்திற்கு சிரமமாக இருப்பதாலும் பொதுமக்களுக்கு சுகாதார கேடு ஏற்படாமல் இருப்பதற்கும் உடன் இப்பணி மேற்கொள்வது அவசியமாகும். எனவே வார்டு எண் 13 காந்தி மைதானம் சித்தவைத்திய சாலையிலிருந்து காந்திமைதானம் பொட்டல் வரை மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கான உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.5.00 இலட்சத்தினை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு:-</u>**

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.4229/2023/இ1

**தீர்மான எண்: 693**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**பொருள்27:** குடிநீர் வடிகால் நிதி 2023-24ன் கீழ் நகராட்சிக்கு சொந்தமான திருப்புவனம் தலைமை நீரேற்று நிலையத்தில் இயங்கிவரும் Unit –I 30HP டர்பைன் மின் மோட்டர் பம்பு செட்குரிய உதிரி பாகங்களுடன் பொருத்தும் பணி மேற்கொள்வதற்கு மதிப்பீட்டுத்தொகை ரூ.21.00 இலட்சத்திற்கு இந்நகர்மன்ற தீர்மான எண் 589, நாள் 30.06.2023 ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதன்பேரில் மேற்கண்ட பணிக்கு 19.07.2023 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | M/s.Deccan Industries Coimbatore | 0.09% மதிப்பீட்டு தொகையை விட குறைவாக |
| 2. | M/s.S.V.Enter Prises, Coimbatore | 5.98% மதிப்பீட்டு தொகையை விட அதிகமாக |

**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டு விலையைவிட 0.09% குறைவாக கொடுத்துள்ள M/s.Deccan Industries, Coimbatore அவர்களின் ஒப்பந்த புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.2470/2023/இ1

தீர்மான எண்: **694**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்28: விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை நகராட்சியானது முதல் நிலை நகராட்சி ஆகும். 2011 ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 87722 ஆகும். தற்போது 2023ன்படி மக்கள் தொகை சுமார் 1,00,000/-அதிகமாகும்.இந்நகரில் நாளது தேதிவரை பாதாள சாக்கடை திட்டம் ஏதும் இல்லாத காரணத்தினால் நகரின் கழிவு நீர் அருகில் உள்ள நீர் நிலைகளில் கலந்து சுற்றுப்புற சூழல் மாசு அடைவதுடன் பல தொற்று நோய்கள் ஏற்பட காரணமாகிறது. எனவே இந்நகரில் பாதாள சாக்கடை திட்டம் அமைப்பதற்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.364.00கோடி ஆகும். இதில் அரசாணை (நிலை) எண் 93 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி2) துறை நாள் 12.07.2023 ன்படி கீழ்கண்ட வாறு பங்குத்தொகை பெறப்பட்டுள்ளது.

| Name of the Project | Project Cost | SBM 2.0 funding | Balance fund to be tied up | Kfw funding | Requirement from other sources of funding | ULB Contribution | Other Sources of Funding | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | CGF 2023-24 | CGF 2024-25 | CGF 2025-26 |
| Comprehensive Underground Sewerage Scheme to Aruppukottai Municipality | 364.00 | 42.94 | 321.06 | 254.80 | 66.26 | 7.22 | 9.04 | 10.00 | 40.00 |

மேற்படி நகராட்சியின் பங்கு தொகைக்கு அரசு நிறுவனத்தில் கடன் ஏதும் பெறப்படும் போது அதற்காகும் வட்டி, கூடுதல் வட்டி கடன் சம்மந்தமான செலவு தொகை மற்றும் திட்ட பராமரிப்பு செலவினத்தை ஈடு செய்யும் பொருட்டு இணைப்பு ஒன்றுக்கு கீழ்க்கண்டவாறு உத்தேசமாக முன்வைப்பு தொகை மற்றும் பாதாள சாக்கடை இணைப்பு மாதாந்திர கட்டணம் நிர்ணயம் செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | கட்டிடத்தின் பரப்பளவு | உத்தேசிக்கப்படும் வைப்பு தொகை | | | உத்தேசிக்கப்படும் பாதாள சாக்கடை இணைப்பு கட்டணம் | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | குடியிருப்பு | குடியிருப்பு அல்லாதவை | வணிகம் தொழிற் சாலை | குடியிருப்பு | குடியிருப்பு அல்லாதவை | வணிகம் தொழிற் சாலை |
| 1 | 600 சதுரடி | 5000 | 10000 | 10000 | 80 | 200 | 200 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | வரை | | | | | | |
| 2 | 601 முதல் 1200 வரை | 7500 | 15000 | 15000 | 100 | 300 | 300 |
| 3 | 1201 முதல் 1800 வரை | 10000 | 20000 | 20000 | 120 | 400 | 400 |
| 4 | 1801 முதல் 2400 வரை | 15000 | 25000 | 25000 | 150 | 500 | 500 |

**அலுவலகக்குறிப்பு:-**

**இந்நகராட்சி பகுதிகளில் பாதாள சாக்கடை திட்ட இணைப்புகளுக்கு மேற்கண்ட பட்டியலின்படி இடத்தின் பரப்பளவிற்கு ஏற்ப வைப்பு தொகை மற்றும் பாதாள சாக்கடை இணைப்பு கட்டணம் நிர்ணயம் செய்ய மன்றம் அனுமதிக்காம்.**

**ந.க.எண்.**7476/2017/**இ1**

**தீர்மான எண்: 695**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**பொருள்**29: வருவாய் நிதி 2023-24 **ன் கீழ் மதுரை ரோடு புதிய பேருந்து நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக பேருந்து நிலையத்திற்குள் தார் சாலை அமைக்கும் பணி மேற்கொள்வதற்கு உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.**29.00 **இலட்சத்திற்கு இந்நகர்மன்றத் தீர்மான எண்** 662, **நாள்** 30.06.2023 **ன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.**

**அதன்பேரில் மேற்கண்ட பணிக்கு** 20.07.2023 **அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் ஒரே மாதிரியான மதிப்பீட்டு சதவீகிதத்தினை கொண்டிருந்ததால் இரண்டு ஒப்பந்ததாரர்களுக்கும் விலைக்குறைப்பு செய்து தரக்கோரியதில் திரு.N.எர்ஷாத்கான் ஒப்பந்ததாரர் விலைக்குறைப்பு செய்து கடிதம் பெறப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.**

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | திரு.N.எர்ஷாத்கான் ஒப்பந்ததாரர் | 0.01% மதிப்பீட்டு தொகையை விட குறைவாக |
| 2. | திருமதி.M.N.காத்தூன்பீவி ஒப்பந்ததாரர் | 0.02% மதிப்பீட்டு தொகையைவிட அதிகமாக |

**அலுவலகக்குறிப்பு:-**

**வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டு விலையைவிட** 0.01% **குறைவாக கொடுத்துள்ள திரு.N.எர்ஷாத்கான் அவர்களின் ஒப்பந்த புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.**

**ந.க.எண்.**2731/2023/**இ1**

**தீர்மான எண்: 696**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்30: அருப்புக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 14 MSR சாலையில் (முரளி டீக்கடை அருகில்) பழைய சாலை சேதமடைந்து போக்குவரத்திற்க்கு சிரமமாக உள்ளதால் உடன் சரிசெய்து தரும்படி பொதுமக்கள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர் கேட்டுக்கொண்டதற்கிணங்கவும், மேலும் ஆணையாளர் மற்றும் நகர்மன்றத்தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி இடம் பார்வையிடப்பட்டது. மேற்கண்ட பணிக்கான பழைய சிமெண்ட் சாலை மிகவும் சேதமடைந்துள்ளதால் போக்குவரத்திற்கு சிரமமாக உள்ளதால் உடன் இச்சாலைப்பணி மேற்கொள்வது அவசியமாகும். எனவே வார்டு எண் 14 MSR சாலையில் (முரளி டீக்கடை அருகில்) பேவர் பிளாக் தளம் அமைக்கும் பணிக்கு உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.3.25 இலட்சத்தினை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு:-</u>

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.4228/2023/இ1

தீர்மான எண்: 697

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்31: அருப்புக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 4 நெசவாளர் காலனி 7வது தெருவில் அமைந்துள்ள மழைநீர்வடிகால் சேமடைந்துள்ளதால் மழைகாலங்களில் மழைநீர் தேங்கி சுகாதாரகேடு ஏற்படுவதாக பொதுமக்கள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர் தெரிவித்துள்ளனர். மேலும் மேற்படி இடத்தினை பார்வையிடும்படி ஆணையாளர் மற்றும் நகர்மன்ற தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி இடம் பார்வையிடப்பட்டது. மேலும் இச்சாலையில் அமைந்துள்ள மழைநீர் வடிகால் மிகவும் சேதமடைந்துள்ளதால் உடன் சரிசெய்வது அவசியமாகும் எனவே வார்டு எண் 4 நெசவாளர் காலனி 7வது தெருவில் மழைநீர்வடிகால் அமைக்கும் பணிக்கு உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.4.00 இலட்சத்தினை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு:-</u>

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.4208/2023/இ1

தீர்மான எண்: 698

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்32: அருப்புக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 4 நெசவாளர் காலனி 9வது தெருவில் உள்ள பழைய மழைநீர் வடிகால் சேதமடைந்துள்ளதால் மழைக்காலங்களில் மழைநீர் செல்லாமல் சாலையில் தேங்கி சுகாதாரகேடு ஏற்படுவதாக பொதுமக்கள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர் தெரிவித்துள்ளார்கள் மேலும் மேற்படி இடத்தினை பார்வையிடும்படி ஆணையாளர் மற்றும் நகர்மன்றத்தலைவர் அவர்கள் அறிவுறுத்தலின்படி இடம் பார்வையிடப்பட்டது. மேற்குறிப்பிட்ட சாலையில் அமைந்துள்ள வாறுகால் மிகவும் சேதடைந்துள்ளதால் பொதுமக்கள் நலன் கருதி அதனை

அகற்றிவிட்டு புதிய மழைநீர் வடிகால் அமைப்பது அவசியமாகும் எனவே வார்டு எண் 4 நெசவாளர் காலனி 9வது தெருவில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.3.30 இலட்சத்தினை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு:-</u>**

**மன்றம் அனுமதிக்கலாம்.** **ந.க.எண்**.4209/2023/இ1

**தீர்மான எண்: 699**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

பொருள்33: அருப்புக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 36 வார்டு பகுதிகளில் 75 டெங்கு கொசு தடுப்பு பணியாளர்களை கொண்டு டெங்கு தடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்கண்ட பணிகளின் நகர்மன்ற அனுமதி காலம் 31.07.2023 வரை உள்ளது. அதனை தொடர்ந்து கொசு புழு ஒழிப்பு பணியானது முதல் கட்டமாக பிரிவு 4, 5 மற்றும் 6 (Zone II) அடங்கிய வார்டுகளில் மொத்தம் 18002 குடியிருப்புகள் உள்ளது. இதில் 360 வீடுகளுக்கு 1 கொசு ஒழிப்பு பணியாளர் வீதம் மொத்தம் 50 கொசு ஒழிப்பு பணியாளர்கள் Zone IIக்கு தேவைப்படுகிறது.

மேற்கண்ட 50 கொசு புழு பணியாளர்களை நியமனம் செய்ய தொழிலாளர் நல வாரிய ஆணை எண் 36 (2டி), நாள் 16.06.2023ன்படி தினக்கூலி அடிப்படையில் நகராட்சியில் மலேரியா பணியாளர் என்கிற பெயரில் அரசாணையில் குறிப்பிட்டுள்ளபடி Grade IIல் நாள் ஒன்றுக்கு ரூ.462/-வீதம் ஒரு மாதத்திற்கு ரூ.12,000/- வரை குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி நிர்வாக செலவின விபரம் கீழ்கண்டவாறு கணக்கிடப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| ஒரு நாள் ஊதியம் | - | ரூ.462/- |
| EPF (13%) | - | ரூ.60.06/- |
| EPF (3.25%) | - | ரூ.15.01/- |
| நிர்வாக செலவு (3.25%) | - | ரூ.23.10/- |
| மொத்தம் | | ரூ.560.17/- |

மேற்கண்ட கணக்கீட்டின்படி ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.560.17 வீதம் 50 நபர்களுக்கு ஒரு நாளைக்கு ரூ.28,008/-, 30 நாட்களுக்கு ரூ.8,40,255/- ஆகின்றது. மேற்கண்ட செலவினத்திற்கும் இப்பணியானது ஒரு மாத காலத்திற்கு மட்டும் தனியார் நிறுவனம் மூலம் வெளி கொணர்வு அடிப்படையில் ஒப்பந்தபுள்ளி கோரி டெங்கு கொசு ஒழிப்பு பணிகளை மேற்கொள்ள ஆணையரின் அனுமதிக்கும் மற்றும் மன்றத்தின் அனுமதிக்கும் சமர்பிக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.3778/2023/எச்1

**தீர்மான எண்: 700**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்34: அருப்புக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 36 வார்டு பகுதிகளில் 75 டெங்கு கொசு தடுப்பு பணியாளர்களை கொண்டு டெங்கு தடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்கண்ட பணிகளின் நகர்மன்ற அனுமதி காலம் 31.07.2023 வரை உள்ளது. அதனை தொடர்ந்து கொசு புழு ஒழிப்பு பணியானது முதல் கட்டமாக பிரிவு 1, 2 மற்றும் 3 (Zone I) அடங்கிய வார்டுகளில் மொத்தம் 18832 குடியிருப்புகள் உள்ளது. இதில் 360 வீடுகளுக்கு 1 கொசு ஒழிப்பு பணியாளர் வீதம் மொத்தம் 52 கொசு ஒழிப்பு பணியாளர்கள் Zone Iக்கு தேவைப்படுகிறது.

மேற்கண்ட 52 கொசு புழு பணியாளர்களை நியமனம் செய்ய தொழிலாளர் நல வாரிய ஆணை எண் 36 (2டி), நாள் 16.06.2023ன்படி தினக்கூலி அடிப்படையில் நகராட்சியில் மலேரியா பணியாளர் என்கிற பெயரில் அரசாணையில் குறிப்பிட்டுள்ளபடி Grade IIல் நாள் ஒன்றுக்கு ரூ.462/-வீதம் ஒரு மாதத்திற்கு ரூ.12,000/- வரை குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி நிர்வாக செலவின விபரம் கீழ்கண்டவாறு கணக்கிடப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| ஒரு நாள் ஊதியம் | - | ரூ.462/- |
| EPF (13%) | - | ரூ.60.06/- |
| EPF (3.25%) | - | ரூ.15.01/- |
| நிர்வாக செலவு (3.25%) | - | ரூ.23.10/- |
| மொத்தம் | | ரூ.560.17/- |

மேற்கண்ட கணக்கீட்டின்படி ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.560.17 வீதம் 52 நபர்களுக்கு ஒரு நாளைக்கு ரூ.29,128.84/-, 30 நாட்களுக்கு ரூ.8,73,865/- ஆகின்றது. எனவே மேற்கண்ட செலவினத்திற்கும் இப்பணியானது ஒரு மாத காலத்திற்கு மட்டும் தனியார் நிறுவனம் மூலம் வெளி கொணர்வு அடிப்படையில் ஒப்பந்தபுள்ளி கோரி டெங்கு கொசு ஒழிப்பு பணிகளை மேற்கொள்ள ஆணையரின் அனுமதிக்கும் மற்றும் மன்றத்தின் அனுமதிக்கும் சமர்பிக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.3777/2023/எச்1

**தீர்மான எண்: 701**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்35: அருப்புக்கோட்டை நகராட்சி 8வது வார்டு ஜவஹர்சங்க தெருவில் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு திட்டம் 2022 -23ன் கீழ் நியாய விலை கட்டிடம் கட்டும் பணிகளில் கூடுதலாக கட்டிடத்தின் முன்புறம் பூக்கல் தளம் மற்றும் முதியவர்கள் வந்து செல்ல வசதியாக கைபிடி, சுற்றுச்சுவர் ஆகிய பணிகளை செய்து தருமாறு நகர்மன்ற உறுப்பினர் அவர்கள்

கோரிக்கை வைத்தன் அடிப்படையில் மேற்படி கட்டிடத்திற்கு கூடுதல் பணிகள் மேற்கொள்வதற்கு ஆகும் உத்தே மதிப்பீட்டுத்தொகை ரூ.1.05இலட்சத்தினை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு:-

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.3851/2023/இ1

தீர்மான எண்: 702

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்36: விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 03, கதவு எண் 48, அன்பு நகர் 3வது தெருவில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ ஸ்ரீனிவாசப்பெருமாள் மற்றும் அருள்மிகு அலமேலு மங்கை திருகோகவிலுக்கு வரிவிலக்கு சான்று கோரி திருக்கோவில் தலைவர் அவர்கள் 03.04.2023ம் தேதியில் மனு செய்துள்ளார்.

மேற்படி வருவாய் ஆய்வர் இடத்தை நேரில் சென்று ஆய்வு செய்ததில் மேற்படி இடமானது பொது மக்கள் வழிபடும் வழிபாட்டு தலமாக பயன்படுத்தப்பட்டு வருவதால் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 83(1) சின்படி சொத்துவரியிலிருந்து விலக்களிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:-

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.1567/2023/அ2

தீர்மான எண்: 703

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்37: இந்நகராட்சி நெசவாளர் காலனி நகராட்சி துவக்கப்பள்ளி மாணவ மாணவயிருக்கு நவீன முறையில் பச்சை வண்ண எழுது பலகைகள் அமைத்து தருமாறு நெசவாளர் காலனி துவக்கப்பள்ளி தலைமையாசிரியர் வேண்டுகோள் விடுத்துள்ளதன் அடிப்படையில் மேற்படி இடம் தள ஆய்வு செய்யப்பட்டது. மேலும் நகர்மன்றத்தலைவர் நகராட்சி ஆணையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்கள் வழங்கியுள்ள நேரடி அறிவுரையின் பேரில் மேற்படி நெசவாளர் காலனி நகராட்சி துவக்கப்பள்ளிக்கு பச்சை வண்ண எழுது பலகைகள் வாங்கி பொருத்தும் பணிக்கு உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.9.90 இலட்சத்தினை நகராட்சி கல்வி நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு:-

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.4221/2023/இ1

தீர்மான எண்: 704

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்38: இந்நகராட்சி மதுரை ரோடு நடுநிலைப்பள்ளி, மேலரதவீதி நகராட்சி நடுநிலைப்பள்ளி மற்றும் இராமசாமிபுரம் நகராட்சி நடுநிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள் தங்களது பள்ளி வளாகத்தில் சிறுவர், சிறுமியர் விளையாடுவதற்கான விளையாட்டு உபகரணங்கள் மற்றும் பச்சை வண்ணம் எழுது பலகைகள் நவீன முறையில் அமைத்து தரும்படி

**வேண்டுகோள் விடுத்துள்ளனர். அதன்படி மேற்படி பள்ளிகள் தள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. நகராட்சி ஆணையாளர், நகராட்சி பொறியாளர் மற்றும் நகர்மன்றத்தலைவர் அவர்களின் நேரடி அறிவுரையின்படியும் மேற்கண்ட பள்ளிகளில் விளையாட்டு உபகரணங்கள் வாங்கவும் மற்றும் பச்சை வண்ணம் எழுது பலககைகள் வாங்கி பொருத்தும் பணிகளுக்கு உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.9.90இலட்சத்தினை நகராட்சி கல்வி நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டபப்படுகிறது**

**<u>அலுவலககுறிப்பு:-</u>**

**மன்றம் அனுமதிக்கலாம்** **ந.க.எண்.**4222/2023/**இ**1

**தீர்மான எண்: 705**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**பொருள்**39: அருப்புக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 1 முதல் 36 வரை உள்ள பகுதிகளுக்கு வைகை மற்றும் தாமிரபரணி கூட்டுக்குடிநீர் திட்டத்தின் கீழ் குடிநீர் விநியோகம் நடைபெற்றுவருகிறது. மேற்கண்ட குடிநீரினை பாதுகாப்பான முறையில் பொதுமக்களுக்கு வழங்குவதற்கு கேஸ் குளோரினேற்றம் செய்து கொடுக்கப்படுகிறது. மேற்கண்ட குளோரின் கேஸ் சிலிண்டர்கள் ஒருவருடத்திற்கு தேவையான அளவு வாங்குவதற்கு ஆகும் உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.7.00 இலட்சத்தினை நகராட்சி குடிநீர் வடிகால் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு:-</u>**

**மன்றம் அனுமதிக்கலாம்.** **ந.க.எண்.**4202/2023/**இ**1

**தீர்மான எண்: 706**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**பொருள்**40: வருவாய் நிதி 2023-24 **ன் கீழ் வார்டு எண்** 8 **ஜவஹர் சங்கம் தென்வடல் தெரு 2வது தெருவில் தார் தளம் அமைக்கும் பணி மேற்கொள்வதற்கு உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.**22.00 **இலட்சத்திற்கு இந்நகர்மன்றத் தீர்மான எண்** 667, **நாள்** 30.06.2023 **ன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.**

**அதன்பேரில்** 19.07.2023 **அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.N.எர்ஷாத்கான், என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விலையைவிட** 9.08 **சதவீதம் அதிகமாக உள்ளதால் இப்பணிக்கான விலைகுறைப்பு சம்மத கடிதம்** (Negotiation) **வழங்கமமாறு கேட்டுக்கொண்டதற்கு இணங்க** 27.07.2023 **அன்று வரப்பெற்ற விலைக்குறைப்பு கடிதத்தின் படி திருத்திய ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.**

| **வ.எண்.** | **ஒப்பந்ததாரர் பெயர்** | **ஒப்பந்தப்புள்ளி விபரம்** |
|---|---|---|
| 1. | **திரு.N.எர்ஷாத்கான் ஒப்பந்ததாரர்** | **மதிப்பீட்டுவிலைக்கே** |

| | | |
|---|---|---|
| 2. | திருமதி.M.N.காத்தூன்பீவி<br>ஒப்பந்ததாரர் | 9.92% மதிப்பீட்டு<br>தொகையைவிட அதிகமாக |

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டு விலைக்கே கொடுத்துள்ள திரு.N.எர்ஷாத்கான் அவர்களின் ஒப்பந்த புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. ந.க.எண்.1889/2023/இ1

**தீர்மான எண்: 707**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்41: வருவாய் நிதி 2023-24 ன் கீழ் வார்டு எண் 4 இரயில்வேபீடர் ரோடு மேற்கு 5வது தெருவில் தார் தளம் அமைக்கும் பணி மேற்கொள்வதற்கு உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.14.50 இலட்சத்திற்கு இந்நகர்மன்றத் தீர்மான எண் 666, நாள் 30.06.2023 ன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.

அதன்பேரில் 19.07.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.M.N.காத்தூன்பீவி, என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விலையைவிட 7.43 சதவீதம் அதிகமாக உள்ளதால் இப்பணிக்கான விலைகுறைப்பு சம்மத கடிதம் (Negotiation) வழங்கமமாறு கேட்டுக்கொண்டதற்கு இணங்க 27.07.2023 அன்று வரப்பெற்ற விலைக்குறைப்பு கடிதத்தின் படி திருத்திய ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | திருமதி.M.N.காத்தூன்பீவி<br>ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டு விலைக்கே |
| 2. | திரு.N.எர்ஷாத்கான்<br>ஒப்பந்ததாரர் | 8.16% மதிப்பீட்டு<br>தொகையைவிட அதிகமாக |

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டு விலைக்கே கொடுத்துள்ள திருமதி.M.N.காத்தூன்பீவி அவர்களின் ஒப்பந்த புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. ந.க.எண்.1889/2023/இ1

**தீர்மான எண்: 708**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்42: வருவாய் நிதி 2023-24 ன் கீழ் வார்டு எண் 12 S.T.பெருமாள் தெருவில் பேவர்பிளாக் தளம் அமைக்கும் பணி மேற்கொள்வதற்கு உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.21.00 இலட்சத்திற்கு இந்நகர்மன்றத் தீர்மான எண் 558, நாள் 20.04.2023 ன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.

அதன்பேரில் 19.07.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.M.N.காத்தூன்பீவி, என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விலையைவிட 0.63 சதவீதம் அதிகமாக உள்ளதால் இப்பணிக்கான விலைகுறைப்பு சம்மத கடிதம் (Negotiation) வழங்கமமாறு கேட்டுக்கொண்டதற்கு இணங்க 27.07.2023 அன்று வரப்பெற்ற விலைக்குறைப்பு கடிதத்தின் படி திருத்திய ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | திருமதி.M.N.காத்தூன்பீவி<br>ஒப்பந்ததாரர் | 1.77% மதிப்பீட்டு<br>தொகையைவிட அதிகமாக |
| 2. | திரு.N.எர்ஷாத்கான்<br>ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டுவிலைக்கே |

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டு விலைக்கே கொடுத்துள்ள திரு.N.எர்ஷாத்கான் அவர்களின் ஒப்பந்த புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.1259/2023/இ1

தீர்மான எண்: 709

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

(ஓம்) திருமதி.சி.சுந்தரலட்சுமி
நகர்மன்ற தலைவர்
அருப்புக்கோட்டை நகராட்சி

ஆணையாளர்
அருப்புக்கோட்டை நகராட்சி